# அது நிச்சயமாய் வரும் அது தாமதிப்பதில்லை. ஆபகூக் 2 : 3

கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதர சகோதரிகளே,

"**நிச்சயமாக**" – என்ற வார்த்தையோடு கூடிய சில வாக்குத்தத்தங்களைக் கொடுக்கிறேன்.

**வாசிப்போம், விசுவாசிப்போம், பெற்றுக்கொள்வோம்.**

நீங்கள் யாருக்கு பயப்பட்டுக் கொண்டிருக்கிறீர்கள்? பட்டயத்துக்கு இரையாகி விடுவோமா என்று பயப்படுகிறீர்களா? கர்த்தரை உங்கள் நம்பிக்கையாக வைத்திருந்தும், இத்தனை பயம் உங்களை ஆட்கொள்கிறதா? வேண்டாம். பயப்பட வேண்டாம்.

**எரேமி. 39 : 17–18 சொல்கிறது :** நீ பயப்படுகிற மனுஷரின – கையிலே ஒப்புக் கொடுக்கப்படுவதில்லை.

**'உன்னை நிச்சயமாக விடுவிப்பேன்' நீ பட்டயத்துக்கு இரையாவதில்லை**

நீ என்னை நம்பினபடியால் உன் பிராணன், உனக்கு கிடைத்த கொள்ளைப் பொருளைப் போல இருக்கும் – என்று கர்த்தர் சொல்லுகிறார்.

**ஆதலால், நீங்கள் செய்ய வேண்டியவை**

**சங். 50 : 14 கூறுகிறது :** நீ தேவனுக்கு ஸ்தோத்திர பலியிட்டு, உன்னதமானவருக்கு உன் பொருத்தனைகளை செலுத்தி, ஆபத்துக்காலத்தில் கர்த்தரை நோக்கிக் கூப்பிடு. அவர் உன்னை விடுவிப்பார். நீ அவரை மகிமைப்படுத்துவாய்.

**சங். 34 : 7 :** கர்த்தருடைய தூதன் அவருக்குப் பயந்தவர்களுக்கு சூழப்பாளயமிறங்கி அவர்களை விடுவிக்கிறார்.

**ஏசாயா 36 : 15 சொல்கிறது :** கர்த்தர், நம்மை நிச்சயமாய் தப்புவிப்பார்,

**பக்தன் பாடுகிறான்**

ஆபத்திலும் அவரை நான், நோக்கிக் கூப்பிடும் வேளையிலும்
என்னைத் தப்புவித்தே முற்றும் இரட்சிப்பாரே,
என் ஆத்தும நேசரவர்.

இந்தப் பாடலை அடிக்கடி பாடுங்கள். புது நம்பிக்கை பிறக்கும்.

மேலும், என் அன்பு சகோதரனே, சகோதரியே,

எத்தனை வருடம். எத்தனை வாக்குத்தத்தம் . . பலன் இல்லையே என சோர்வுற்றிருக்கிறீர்களா?

**ஆதி. 17 : 19 சொல்கிறது,**

உன் மனைவியாகிற சாராள், "நிச்சயமாய்" உனக்கு ஒரு குமாரனைப் பெறுவாள் – என்பதாக.

மேற்கண்ட வசனத்தை உங்களுக்கு சொந்தமாக்கிக் வாசியுங்கள்.

**கீழ்க்கண்டவாறு அறிக்கை செய்யுங்கள்.**

என் மனைவியாகிய . . . "**நிச்சயமாய்**" – எனக்கு ஒரு குமாரனைப் பெறுவாள். ஆமென்.

மேலும், வெளிநாடு செல்ல முடியவில்லையே என தவிக்கும் என் அன்பு கர்த்தருடைய பிள்ளையே,

**ஆதி. 50 : 24 சொல்கிறது :** தேவன் "**நிச்சயமாய்**" உங்களை சந்தித்து, நீங்கள் இந்த தேசத்தை விட்டு, தாம் ஆபிரகாமுக்கும், ஈசாக்குக்கும், யாக்கோபுக்கும் ஆணையிட்டு கொடுத்திருக்கும் தேசத்துக்கு போகப்பண்ணுவேன்

**எரேமியா 32 : 41 சொல்கிறது :** அவர்களுக்கு நன்மை செய்யும்படி அவர்கள் மேல் சந்தோஷமாயிருந்து, என் முழு இருதயத்தோடும், என் முழு ஆத்துமாவோடும். அவர்களை இந்த தேசத்திலே "**நிச்சயமாய்**" நாட்டுவேன் – என்பதாக.

எதிரிகளால் நொந்துபோன என் அன்பு சகோதரியே,

**எசே. 36 : 1 சொல்கிறது,**

உங்களைச் சுற்றிலும் இருக்கிற புறஜாதிகள் தங்களுடைய அவமானத்தை "**நிச்சயமாய்** " சுமப்பார்கள்.

**ஏசா. 55 : 3 ன் படியாக**

தாவீதுக்கு அருளின "**நிச்சயமான**" கிருபைகளை உங்களுக்கு நித்திய உடன்படிக்கையாக ஏற்படுத்துவார்.

**பக்தன் பாடுகிறார்**

இவ்வுலகமான மாயாபுரி அழியப்போவதும், நிச்சயம்.
இரட்சகரே நீர் ராஜாவாக வருவது அதி நிச்சயம்.

ஆதலால் நிச்சயமான தேவனுடைய இராஜ்யத்தை தேடுவோம்.

**அது நிச்சயமாய் வரும். ஆமென்.**